# ஆகஸ்ட்– 12 –பொதுக்கால 19ம் ஞாயிறு

## “விண்ணகத்திலிருந்து இறங்கிவந்த வாழ்வுதரும் உணவு நானே” யோவா.6:51

## முதல் வாசகம் : 1 அரசர்19 : 4 – 8

அக்காலத்தில் எலியா பாலைநிலத்தில் ஒருநாள் முழுதும் பயணம் செய்தார். அங்கே ஒரு சூரைச்செடியின் அடியில் அமர்ந்து கொண்டு, தாம் சாகவேண்டுமெனப் பின்வருமாறு மன்றாடினார் ”ஆண்டவரே, நான் வாழ்ந்தது போதும் என் உயிரை எடுத்துக் கொள்ளும் நான் என் மூதாதையரைவிட நல்லவன் அல்ல” பின்னர் அச்சூரைச் செடியின் அடியில் அவர் படுத்துறங்கினார். அப்போது வானதூதர் அவரைத் தட்டி எழுப்பி, ”எழுந்து சாப்பிடு” என்றார்.அவர் கண் விழித்துப் பார்க்கையில், இதோ! தணலில் சுட்ட ஒரு அப்பமும் ஒரு குவளையில் தண்ணீரும் தம் தலைமாட்டில் இருக்கக்கண்டார். அவற்றை அவர் உண்டு பருகியபின் திரும்பவும் படுத்துக்கொண்டார்.ஆண்டவரின் தூதர் இரண்டாம் முறை வந்து, அவரைத் தட்டி எழுப்பி, ”எழுந்து சாப்பிடு ஏனெனில் நீ நீண்டபயணம் செய்யவேண்டும்” என்றார்.அப்பொழுது அவர் எழுந்து உண்டுபருகினார். அவ்வுணவினால் வலிமை அடைந்த அவர், நாற்பது பகலும் நாற்பது இரவும் நடந்து, ஓரேபு என்ற கடவுளின் மலையை அடைந்தார்.

**பதில்பாடல் :** ஆண்டவர் எத்துணை இனியவர் என்று சுவைத்துப் பாருங்கள்.

## இரண்டாம் வாசகம்: ஏபேசியர் 4: 30 --- 5: 2

சகோதர சகோதரிகளே! கடவுளின் தூய ஆவியார்க்குத் துயரம் வருவிக்காதீர்கள். மீட்புநாளை முன்னிட்டு உங்கள்மீது பொறிக்கப்பட்ட முத்திரையாக அவர் இருக்கிறார்.மனக்கசப்பு, சீற்றம், சினம், கூச்சல், பழிச்சொல் எல்லாவற்றையும் தீமை அனைத்தையும் உங்களைவிட்டு நீக்குங்கள்.ஒருவருக்கொருவர் நன்மைசெய்து பரிவுகாட்டுங்கள் கடவுள் உங்களைக் கிறிஸ்து வழியாக மன்னித்ததுபோல நீங்களும் ஒருவரை ஒருவர் மன்னியுங்கள்.ஆகவே நீங்கள் கடவுளின் அன்பார்ந்த பிள்ளைகளாய் அவரைப்போல் ஆகுங்கள்.கிறிஸ்து உங்களுக்காகத் தம்மை நறுமணம் வீசும் பலியும் காணிக்கையுமாகக் கடவுளிடம் ஒப்படைத்து உங்களிடம் அன்புகூர்ந்ததுபோல, நீங்களும் அன்பு கொண்டு வாழுங்கள்.

## நற்செய்தி : யோவான் 6 : 41 – 51

அக்காலத்தில் ”விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த உணவுநானே” என்று இயேசுகூறியதால் யூதர்கள் அவருக்கு எதிராக முணுமுணுத்தார்கள்.”இவர் யோசேப்பின் மகனாகிய இயேசு அல்லவா? இவருடைய தாயும் தந்தையும் நமக்குத் தெரியாதவர்களா? அப்படியிருக்க, “நான் விண்ணகத்திலிருந்து இறங்கிவந்தேன்“ என இவர் எப்படிச்சொல்லலாம்?” என்று பேசிக்கொண்டார்கள்.இயேசு அவர்களைப் பார்த்துக்கூறியது. ”உங்களிடையே முணுமுணுக்கவேண்டாம்.என்னை அனுப்பிய தந்தை ஈர்த்தாலொழிய எவரும் என்னிடம் வர இயலாது. என்னிடம் வருபவரை நானும் இறுதிநாளில் உயிர்த்தெழச் செய்வேன். ”கடவுள்தாமே அனைவருக்கும் கற்றுத்தருவார்“ என இறைவாக்கு நூல்களில் எழுதியுள்ளது. தந்தைக்குச் செவிசாய்ந்து அவரிடமிருந்து கற்றுக்கொண்ட அனைவரும் என்னிடம் வருவர்.கடவுள்தாமே கற்றுத்தருவார் என்பதிலிருந்து தந்தையை எவராவது கண்டுள்ளார் என்று பொருள் கொள்ளக்கூடாது. கடவுளிடமிருந்து வந்துள்ளவர் மட்டுமே கடவுளைக் கண்டுள்ளார். உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் என்னை நம்புவோர் நிலைவாழ்வைக் கொண்டுள்ளனர்.வாழ்வுதரும் உணவு நானே.உங்கள் முன்னோர் பாலைநிலத்தில் மன்னாவை உண்டபோதிலும் இறந்தனர்.உண்பவரை இறவாமல் இருக்கச் செய்யும் உணவு விண்ணகத்திலிருந்து இறங்கிவந்த இந்த உணவே.”விண்ணகத்திலிருந்து இறங்கிவந்த வாழ்வுதரும் உணவு நானே. இந்த உணவை எவராவது உண்டால் அவர் என்றுமே வாழ்வார். எனது சதையை உணவாகக்கொடுக்கிறேன். அதை உலகு வாழ்வதற்காகவே கொடுக்கிறேன்” என்றார்.

**தியானம்:** நாம் கடவுளால் உருவாக்கப்பட்ட, தேர்ந்து கொள்ளப்பட்ட மண் பாத்திரங்கள். “குயவர்கள் வருந்தி உழைத்து மென்மையான களிமண்ணைப் பிசைந்து, நம்முடைய தேவைக்காக ஒவ்வொரு மண்கலத்தையும் வனைகிறார்கள். ஒரே மண்ணைக் கொண்டு தான் நல்ல வகையிலும் மாறான வகையிலும் பயன்படுகிற கலன்களைச் செய்கிறார்கள். இவற்றில் ஒவ்வொன்றும் எவ்வகையில் பயன்பட வேண்டும் என்பதைக் குயவர்களே முடிவு செய்கிறார்கள்’’ (சாஞா.15:7). நாம் எந்த விதத்தில் இந்த உலகத்திற்கு பயன்பட வேண்டும் என்று தேவனே முடிவு செய்கின்றார். நமது பணி அவருடைய நோக்கத்தை இந்த உலகத்திலே நிறைவேற்றுவதே தவிர மனிதர்கள் அதற்காக நமக்கு அங்கீகாரங்களை வழங்கவேண்டும், நமது பணிக்காக நம்மை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பதல்ல. அவ்வாறு நாம் எதிர்பார்த்தால் அது நமக்கு ஏமாற்றத்தைக் கொண்டுவரும். எந்த நிலையில் இருந்தாலும், எந்த சூழ்நிலையை நாம் சந்தித்தாலும் நாம் தேவனின் கரங்களில் தவழும் பாத்திரம், அவருடைய காரியங்களுக்காக பயன்படுத்தப்படுகிறோம் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. சிறைச்சாலையில் இருந்த யோசேப்பு, அடிமைத்தனத்தில் இருந்த தானியேல், ஆடுமேய்த்துக் கொண்டிருந்த தாவீது இவர்கள் எங்கிருந்தார்கள் என்பதில் அல்ல மாறாக தேவன் இவர்களில் என்ன காரியத்தைச் செய்ய விரும்புகிறார் என்பதை மறக்காமல் இருந்ததால் இந்த உலகத்திற்கு ஆசீர்வாதமான பாத்திரங்களாக மாறினார்கள். எனவே மக்களுடைய அங்கீகாரங்களுக்கும், மக்களுடைய புரிதல்களுக்கும் நமது ஆற்றலை, அறிவை, திறமைகளை நிரூபித்து உலகத்திற்கு நாம் யார் என்று காட்டுவதில் அல்ல மாறாக கடவுள் என் வழியாக என்ன செய்ய விரும்புகின்றார் என்பதை இயேசுவைப்போல அல்லும் பகலும் தியானித்து உலகத்திற்கு வாழ்வு கொடுக்கும், ஆற்றலைக் கொடுக்கும், உணவாக மாறவேண்டும். நம் வாழ்வுக்கான அர்த்தம், கடவுளின் பணிக்காக நம்மையே அர்ப்பணிப்பதிலும் அர்ப்பணமாவதிலும்தான் அடங்கியிருக்கின்றது என்பதை உணர்ந்து செயல்படுவோம், வாழ்வைக் கொடுத்த இயேசுவாக மாறுவோம்.